# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.9/2022.
Prosecution witness for P.W.1.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. செல்வி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.04.2025.

A2, 3, 9 present. Others absent. 317 Crpc petition filed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது வாகைக்குளத்தில் குடியிருந்து வீட்டோடு இருந்து வருகிறேன். இறந்துபோன சுடலைமுத்து என் கணவர். ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என் கணவரின் கையொப்பம்தான். அது **அ.சா.ஆ 1**. அந்த கையொப்பத்தை எதற்காக என் கணவர் போட்டார் என்று எனக்கு தெரியாது.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

என் கணவரை யாரோ வெட்டிக் கொன்றுவிட்டார்கள். அவரை யார் கொலை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. சண்முகத்தேவர்மற்றும் பட்டமுத்து ஆகியோரின் இரட்டை கொலை வழக்கில் என் கணவர் புகார்தாரராக இருந்தார். அந்த காரணத்தினால் என் கணவர் கொலை செய்யப்பட்டாரா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பட்டமுத்து என் கணவரின் அண்ணன். சண்முகத்தேவர் என் கணவரின் சித்தப்பா. சுமார் 7, 8 ஆண்டுகளுக்கு முன்பு சண்முகத்தேவர் மற்றும் பட்டமுத்து இறந்துவிட்டார்கள். அழகுகிருஷ்ணன் என்பவர் என் சித்தப்பா மகன். அவர்

இறந்துவிட்டார். எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. என் கணவர் இறந்த அன்று மற்றொருவர் இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. அவர் எப்படி இறந்தார் என்றால் எனக்கு தெரியாது.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 24.12.2015 அன்று இரவு சுமார் 10.45 மணியளவில் மேற்படி சண்முகத்தேவர் மற்றும் பட்டமுத்து கொலை வழக்கில் என் கணவர் சுடலைமுத்து புகார்தாரராக இருந்த காரணத்தினால் கால்வாய் ரயில்வே கேட் வடபுறமாக என் கணவர், அவரது தம்பி ரமேஷ், சண்முகத்வேர் மகன்களான அழகுகிருஷ்ணன் மற்றும் வீரபாகு நின்று பேசிக் கொண்டிருந்தபோது எதிரிகள் அனைவரும் இருசக்கர வாகனத்தில் அங்கு வந்து அரிவாளைக் கொண்டு என் கணவரை வெட்டியதாகவும், எனது மைத்துனர் மனைவி வசந்தி சம்பவ இடம் வந்து 108 ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு என் கணவர் எடுத்துச் செல்லப்பட்டு போலீஸ் விசாரணையின்போது என் கணவர் புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றும், வாக்குமூலத்தில் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களின் பெயரை என் கணவர் குறிப்பிட்டு சொல்லியுள்ளதாகவும் சொல்லியுளேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை
இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.04.07 16:45:00 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.9/2022.

Prosecution witness for P.W.2.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. வசந்தி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.04.2025.

A2, 3, 9 present. Others absent. 317 Crpc petition filed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது செய்துங்கநல்லூரில் குடியிருந்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அ.சா.1 என் கணவரின் தம்பியின் மனைவி. எதிரிகளை தெரியாது. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 24.12.2015 அன்று இரவு சுமார் 10.45 மணியளவில் அசா.1ன் கணவரான சுடலைமுத்து வெட்டுபட்டது சம்பந்தமாக எனக்கு தகவல் கிடைத்து நான் கால்வாய் ரயில்வே கேட்டுக்கு வடபுறமாக சம்பவ இடத்திற்கு சென்று 108 ஆம்புலன்சுக்கு தகவல் கொடுத்து அவரை பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், சம்பவம் குறித்து மேற்படி சுடலைமுத்து புகார் வாக்குமூலம் போலீசாரிடம் கொடுத்ததாகவும், அந்த வாக்குமூலத்தில் சுடலைமுத்து மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களின் பெயர்களை

குறிப்பிட்டு சொல்லியுள்ளதாகவும் சொல்லியுள்ளேன் என்றும், எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதாலும், எதிரிகள்மீதுள்ள பயத்தின் காரணமாகவும், பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.04.07 16:45:08 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.9/2022.

Prosecution witness for P.W.3.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ரமேஷ். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.04.2025.

A2, 3, 9 present. Others absent. 317 Crpc petition filed.

முதல் விசாரணை

நான் தற்போது கால்வாயில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 என் அண்ணன் மனைவி. அ.சா.2 என் மற்றொரு அண்ணனின் மனைவி. அ.சா.1—ன் கணவர் சுடலைமுத்து இறந்துவிட்டார். எதிரிகளை தெரியும். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 24.12.2015 அன்று இரவு 10.45 மணியளவில் கால்வாய் ரயில்வே கேட்டிற்கு வடபுறமாக நானும், மேற்படி சுடலைமுத்துவும் மற்றும் சிலரும் நின்று பேசிக் கொண்டிருந்தபோது எதிரிகள் அங்கு வந்து மேற்படி சுடலைமுத்து எதிரிகளுக்கு எதிராக பட்டமுத்து மற்றும் சண்முகத்தேவர் கொலை வழக்கில் புகார்தாரராக இருந்த காரணத்தினால் அவரை கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் அங்கு வந்து மேற்படி சுடலைமுத்துவை அரிவாளால் தாக்கியதால் அங்கு வந்த அ.சா.2 ஆம்புலன்சுக்கு தகவல்

சொல்லி அவரை பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் அனுமதித்ததாக சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிகளும், என் உறவினர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN
Digitally signed by M THANDAVAN
Date: 2025.04.07 16:45:18 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.9/2022.
Prosecution witness for P.W.4.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு.வீரபாகு. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.04.2025.

A2, 3, 9 present. Others absent. 317 Crpc petition filed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சங்கர் நகர் தாழையூத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன சுடலைமுத்து என் பெரியப்பா மகன். சாட்சி அழகுமுத்து என் உடன் பிறந்த அண்ணன். அவர்மீது வண்டி வைத்து ஏற்றி கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 24.12.2015 அன்று இரவு 10.45 மணியளவில் கால்வாய் ரயில்வே கேட்டிற்கு வடபுறமாக நானும், மேற்படி சுடலைமுத்துவும் மற்றும் சிலரும் நின்று பேசிக் கொண்டிருந்தபோது எதிரிகள் அங்கு வந்து மேற்படி சுடலைமுத்து எதிரிகளுக்கு எதிராக பட்டமுத்து மற்றும் சண்முகத்தேவர் கொலை வழக்கில் புகார்தாரராக இருந்த காரணத்தினால் அவரை கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் அங்கு வந்து மேற்படி சுடலைமுத்துவை அரிவாளால் தாக்கியதால் அங்கு வந்த அ.சா.2 ஆம்புலன்சுக்கு தகவல்

சொல்லி அவரை பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் அனுமதித்ததாக சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிகளும், என் உறவினர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.04.07 16:45:26 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.